සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

| | | |
|---|---|---|
| කර්ණාටක සංගීතය I<br>கர்நாடக சங்கீதம் I<br>Carnatic Music I | 55 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**கவனிக்க:**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் பிறபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. 'ஸரஸூட' என்ற ஆதிதாள வர்ணம் அமைந்துள்ள இராகம்
   (1) பிலஹரி (2) கல்யாணி (3) ஸிம்மேந்திர மத்யமம்
   (4) ஆபோகி (5) சாவேரி

2. தா...நம்த...தொம் போன்ற பொருளற்ற கோர்வைகளால் மட்டும் பாடப்படும் மனோதர்மப் பிரிவு
   (1) தில்லானா (2) தரனா (3) தானம் (4) பல்லவி (5) நிரவல்

3. 'மரகதவல்லிம்', 'ஜெகதீஸ்வரி' ஆகிய சௌககாலக் கிருதிகளின் ஓர் ஆவர்த்தனம் எடுத்துக் கொள்ளும் ஸ்வரங்களின் மொத்த அட்சரங்கள்
   (1) 8 (2) 16 (3) 24 (4) 32 (5) 64

4. 'அத்யாத்ம விவேகம்' - என்னும் வேதாந்த நூலை இயற்றியவர்
   (1) சாரங்க தேவர் (2) வேங்கடமகி (3) ஹரிபாலர் (4) ஷேத்ரக்ஞர் (5) ஜெயதேவர்

5. பல நுட்ப சுருதிகள், கமகங்கள், அல்பத்வ, துர்பல ஸ்வரப் பிரயோகங்கள் போன்றவற்றைக் கொண்டு தானத்தினால் பிரகாசிக்கும் இராகம்
   (1) சுத்த இராகம் (2) சாயாலக இராகம் (3) இராகாங்க இராகம்
   (4) கனபஞ்சக இராகம் (5) திவிதீய கனபஞ்சக இராகம்

6. பச்சை சிருங்கார ரஸம் பொருந்திய உருப்படி
   (1) கீர்த்தனை (2) தானவர்ணம் (3) ஜாவளி (4) தில்லானா (5) இராகமாலிகை

7. பதநிஸ்ரி - தநிஸ்ரி - நிஸ்ரி - தநிஸ்ரி - பதநிஸ்ரி என்னும் ஸ்வரக்கோர்வை அமைந்துள்ள யதி
   (1) டமருயதி (2) மிருதங்கயதி (3) ஸ்ரோதோவகயதி
   (4) கோபுச்சயதி (5) சமயதி

8. 'முருகா உன்மேல்' - என்ற ஷண்முகப்ரியா இராகத்தில் அமைந்த தானவர்ணத்தை இயற்றியவர்
   (1) பாபநாசம் சிவன் (2) மானம்புச்சாவடி வெங்கட ஸுப்பய்யர்
   (3) அருணாசல அண்ணாவி (4) ஜி.என். பாலசுப்பிரமணியம்
   (5) தரங்கம்பாடி பஞ்சநாத அய்யர்

9. அமிர் குஸ்ரு என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட தாள வாத்தியம்
   (1) ஸரோட் (2) தபேலா (3) மிருதங்கம் (4) கிளாரினட் (5) கஞ்சிரா

10. 'மாதர் மடப்பிடியும்' - என்ற தேவாரம் பாடப்பட்ட தலம்
    (1) திருவானைக்கா (2) திருவலஞ்சுழி (3) சீர்காழி (4) திருதர்மபுரம் (5) திருவாலவாய்

11. சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம் என்னும் ஸ்வரஸ்தானங்களை எடுத்துக்கொள்ளும் மேளகர்த்தா சக்கரங்கள் முறையே
    (1) 1, 7 (2) 2, 8 (3) 3, 9 (4) 4, 10 (5) 5, 11

12. தஞ்சாவூர் வீணைகளில் யாளிமுகம் செய்யப் பயன்படுத்தப்படும் மரம்
    (1) கொறுக்கு (2) பலா (3) மா (4) கருங்காலி (5) நுணா

tamilguru.lk

[பக். 2 ஐப் பார்க்க

13. சங்கீர்ண இராகங்களில் ஒன்று
(1) சாரங்கா (2) சௌராஷ்டிரம் (3) த்விஜாவந்தி (4) ஸ்ரீரஞ்சனி (5) ரீதிகௌளை

14. ஸிதார் வாத்தியத்தில் வாசிக்கப்படும் துரித லய வாசிப்புமுறை
(1) அம்ரித்கான் வாசிப்பு (2) மஸ்ஸித்கான் வாசிப்பு (3) விலயாட்கான் வாசிப்பு
(4) ராஸாக்கான் வாசிப்பு (5) நிஹல்செங் வாசிப்பு

15. 29 வது மேளத்தின் ஜன்யமான வக்ர ஷாடவ சம்பூர்ண இராகம்
(1) ஹமீர் கல்யாணி (2) ஹிந்துஸ்தான் பெஹாக் (3) காபி
(4) கானடா (5) ஹிந்துஸ்தான் காபி

16. தஞ்சை துளஜா மகாராஜாவால் எழுதப்பட்ட நூல்
(1) சதுர்த்தண்டிப் பிரகாசிகை (2) சங்கிரக சூடாமணி (3) சங்கீத சாராம்ருதம்
(4) கிருதி மாலா (5) சங்கீத சுதாகரம்

17. நவரஸகன்னட என்னும் இராகம்
(1) ஔடவ ராகமாகும். (2) ஷாடவ சம்பூர்ண ராகமாகும்.
(3) உபயவக்ர ராகமாகும். (4) ஸ்வராந்தர ராகமாகும்.
(5) ஔடவ சம்பூர்ண ராகமாகும்.

18. கிற்றார் வாசிக்கும் முறையில் 'ஸ்பானிஷ் கிற்றார் (Spanish Guitar)' வாசிப்பு முறையானது அறிமுகப்படுத்தப்பட்ட நூற்றாண்டு
(1) 11 (2) 12 (3) 15 (4) 16 (5) 17

19. தாளமாலிகையாக அமைந்துள்ள உருப்படி
(1) திருவாசகம் (2) சூளாதி (3) ஜாவளி (4) அஷ்டபதி (5) இலட்சண கீதம்

20. கடம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருட்கள்
(1) வெள்ளி, இரும்பு, களிமண் (2) உருக்கு, வெள்ளி, களிமண்
(3) செம்பு, இரும்பு, களிமண் (4) நாகம், இரும்பு, களிமண்
(5) செம்பு, கிட்டம், களிமண்

21. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - விரிவான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகமாகும்.
B - மாலையில் பாடக்கூடிய இராகமாகும்.
C - எல்லா வகையான இசை வடிவங்களும் இந்த இராகத்தில் உள்ளன.
D - அந்நிய ஸ்வரமாகிய சதுஸ்ருதி தைவதம் அவரோகணத்தில் வருகிறது.
E - பண்டைத் தமிழிசையில் பழம் பஞ்சுரம் என்று அழைக்கப்படுகின்றது.
மேற்கூறப்பட்ட கூற்றுகளில் பைரவி இராகத்திற்குப் **பொருத்தமற்ற** கூற்றுகள்
(1) A, C ஆகியன (2) B, D ஆகியன (3) B, E ஆகியன (4) C, E ஆகியன (5) D, E ஆகியன

22. தீக்ஷிதர் சம்பிரதாயப்படி 'தேவக்கிரியா' என்று அழைக்கப்படும் இராகம்
(1) ஆபோஹி (2) ஸ்ரீரஞ்சனி (3) கமாஸ்
(4) ஷண்முகப்பிரியா (5) சுத்தஸாவேரி

23. பின்வரும் வாத்தியங்களுள் பியானோ, வயலின் என்பவை முறையே
(1) ஏகத்வனி வாத்தியம், பஹுத்வனி வாத்தியம்
(2) சங்கீத வாத்தியம், ஸாதக வாத்தியம்
(3) ஸ்திர வாத்தியம், சர வாத்தியம்
(4) கன வாத்தியம், ஸுஷீர வாத்தியம்
(5) பக்க வாத்தியம், பிரதான வாத்தியம்

More Past Papers at
tamilguru.lk

24. பம்பாயிலுள்ள 'கயான் உதேஜாக் மண்டலி' என்ற இசைச்சங்கத்தில் சேர்ந்து இசை உலகிலேயே தனது எஞ்சிய நாட்களைக் கழித்தவர்
(1) பாத்கண்டே (2) பாக் (3) தான்சேன் (4) அமீர் குஸ்ரு (5) மொஸாட்

25. 'வீடாலவாயிலாய்' என்ற தேவாரம் அமைந்துள்ள பண்
(1) ஸாதாரி (2) கௌசிகம் (3) இந்தளம்
(4) வியாழக் குறிஞ்சி (5) தக்கேசி

26. இயற்கை ஒலிகளை இணைத்துக்கொண்டு பீதோவன் அவர்கள் இயற்றிய சிம்போனி
(1) பாஸ்ட்ரல் சிம்போனி (Pastoral Symphony)
(2) மூன்லைட் ஸொனேட்டா (Moonlight Sonata)
(3) சிம்போனி - 3 (Symphony - 3)
(4) இரோசியா (Erocia)
(5) பாரிஸ் சிம்போனி (Paris Symphony)

[பக். 3 ஐப் பார்க்க

27. கானடா இராகத்தின் அவரோகணத்தில் வரும் ஸநிஸ்தாபமபகாமரீஸ என்ற பிரயோகத்தில் வரும் கமகம்
(1) திரிபுச்சம் (2) ஆந்தோளிதம் (3) ஆகதம் (4) ஸ்புரிதம் (5) கம்பிதம்

28. பொப்பிலி கேசவையாவைக் குருவாகக் கொண்டதனால் தானம் பாடுவதில் சிறந்து விளங்கிய வாக்கேயகாரர்
(1) முத்துத்தாண்டவர் (2) ஷேத்ரக்ஞர்
(3) கோபாலகிருஷ்ணபாரதியார் (4) மாரிமுத்தாப்பிள்ளை
(5) கனம் கிருஷ்ணய்யர்

29. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - தெலுங்கு மொழியில் இயற்றப்பட்டுள்ளது.
B - சேர் எட்வின் என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.
C - ஹிந்துஸ்தானி சங்கீதம் உருவாகிய பின் இயற்றப்பட்டது.
D - கீதகோவிந்தம் என அழைக்கப்படுகிறது.
E - மங்கள சுலோகத்தைக் கொண்டுள்ளது.
மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் அஷ்டபதியைப் பற்றிய சரியான கூற்றுகள்
(1) A, B, C ஆகியன (2) A, C, E ஆகியன (3) A, D, E ஆகியன (4) B, C, E ஆகியன (5) B, D, E ஆகியன

30. மேலைத்தேய இசையில் காணப்படும் D.FLAT க்கு ஒப்பாக கர்நாடக இசையில் குறிப்பிடப்படும் ஸ்வரஸ்தானம்
(1) சுத்த ரிஷபம் (2) சதுஸ்ருதி ரிஷபம் (3) சுத்த தைவதம்
(4) சதுஸ்ருதி தைவதம் (5) கைசிகி நிஷாதம்

31. 'பரியாய முத்திரைக்கார' என்று அழைக்கப்படும் வாக்கேயகாரர்
(1) அருணகிரிநாதர் (2) ஸ்வாதித்திருநாள் மகாராஜா
(3) சியாமா சாஸ்திரிகள் (4) தியாகராஜ சுவாமிகள்
(5) முத்துஸ்வாமி தீக்ஷிதர்

More Past Papers at
tamilguru.lk

32. பின்வரும் கால அளவுகளில் ஸ்தூல காலங்களுள் அடங்குவது
(1) களை, லவம், லகு (2) த்ருதம், லகு, களை
(3) கணம், அனுத்ருதம், புலுதம் (4) சதுர்பாகம், லகு, புலுதம்
(5) லகு, குரு, காகபாதம்

33. 1968 ஆம் ஆண்டு பியானோ வாத்தியத்தை மக்கள் முன்னிலையில் முதன்முதலில் வாசித்தவர்
(1) கிறிஸ்டோவோரி (2) J. C. பாக் (3) மொஸாட் (4) பீதோவன் (5) ஸ்டாடிவேரியஸ்

34. செம்மங்குடி ஸ்ரீநிவாஸஐயங்கார் தனது முதல் கச்சேரியை சென்னை இந்திய காங்கிரஸ் மகாநாட்டில் செய்த ஆண்டு
(1) 1908 (2) 1926 (3) 1927 (4) 1929 (5) 1939

35. இசையின் எல்லா நுட்பங்களையும் கையாண்டு வாசிக்கக்கூடிய மங்கள வாத்தியம்
(1) வயலின் (2) தம்புரா (3) வீணை (4) நாதஸ்வரம் (5) புல்லாங்குழல்

36. த மெஜிக் புளுட் (The Magic Flute) எனும் நூலை கி.பி. 1791 ஆம் ஆண்டில் எழுதிய வாக்கேயகாரர்
(1) பீதோவன் (2) பாக் (3) மொஸாட் (4) தான்சேன் (5) ஸாகிர் ஹுசைன்

37. பூர்வி இராகத்தில் அமைந்த விலோம சாபு தாள ஜாவளி
(1) சமயமிதே (2) வேகநீவு (3) வகலாடி
(4) சகிபிராண (5) நீமாடலே மாயன்னுரா

38. மிருதங்கத்தின் வலந்தலை மூட்டு வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றது?
(1) கரணை, அரடா (2) வளையம், மீட்டு (3) புடா, நங்கி
(4) தோல்வார், உட்கரைத்தட்டு (5) கொட்டு, மார்ச்சனை

39. கீழே தரப்பட்ட கூற்றுகளைக் கருதுக.
A - ஸ்ரீ லலிதாதாஸன் கீர்த்தனைகள் என்ற நூலை வெளியிட்டவர்
B - ராம மந்திரம் என்னும் சங்கத்தை நிறுவி பல திருப்பணிகளைச் செய்தவர்
C - ரிஷ்ய சிருங்கர், இது நிஜமா என்கின்ற திரைப்படங்களில் நடித்த வித்துவான்
D - தில்லானாக்கள் பலவற்றை இயற்றிய வயலின் விற்பன்னர்
மேற்கூறப்பட்டவற்றுள் செம்பை வைத்தியநாத பாகவதரையும் லால்குடி ஜெயராமனையும் குறிப்பிடும் கூற்றுகள் முறையே
(1) A, C ஆகியன (2) A, D ஆகியன (3) B, C ஆகியன (4) B, D ஆகியன (5) C, D ஆகியன

40. அரிட்நாய்டு குருத்தெலும்பு (Arytenoid Catilage) எப்பகுதியில் அமைந்துள்ளது?
(1) நடுச்செவியில் (2) குரல்வளையில் (3) புறச்செவியில் (4) நத்தைச்சுருளில் (5) செவிப்பறையில்

41. சங்கீர்ண லகுவை பிரஸ்தாரம் செய்யும்போது வருவது
(1) ర + ర + O (2) ర + ◡ + ◡ + ◡ (3) ◡ + O + O + O
(4) ర + ర + ర (5) ర + ర + ◡



More Past Papers at tamilguru.lk

42. ஸகமதநிஸ் - ஸ்நிதமகரிஸ - என்னும் ஆரோகண அவரோகணங்களையுடைய இராகம்
(1) வசந்தா (2) கமாஸ் (3) சாவேரி (4) ஆனந்தபைரவி (5) ஸ்ரீரஞ்சனி

43. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
- இசை அணிகளுள் மிகச் சிறந்ததோர் அணியாகும்.
- இராக பாவத்தை விளக்குவதற்காக அமைந்தவையாகும்.
- சாகித்தியத்தின் உட்கருத்துகளை விளக்குவதற்காக ஏற்பட்டவையாகும்.

இக்கூற்றுகளால் குறிப்பிடப்படும் இசையணி
(1) சிட்டைஸ்வரம் (2) ஸ்வரசாகித்தியம் (3) சொற்கட்டுசாகித்தியம்
(4) சங்கதி (5) மத்யமகாலசாகித்தியம்

44. நவரோஜ் இராகத்தின் ஆரோகண அவரோகணங்கள் முறையே
(1) ப்தநிஸரிகம மகரிஸநிதப்
(2) மப்தநிஸரிக மகரிஸநிதப்
(3) ப்தநிஸரிகமப மகரிஸநிதப்
(4) ப்தநிஸரிகமபத பமகரிஸநிதப்
(5) ஸரிகமபதநி நிதபமகரிஸ

45. ஐரோப்பிய சங்கீதத்தில் பெண்களுக்குரிய மூவகைக் குரல்வகைகளில் நடுத்தரமான குரலினைக் குறிப்பது
(1) ஸொப்ரானோ (Soprano) (2) பரிடோன் (Baritone)
(3) ஆல்டோ (Alto) (4) கொண்டராக்டோ (Contracto)
(5) மெஸோ ஸொப்ரானோ (Mezzo Soprano)

46. சென்னையில் தங்கக் கோபுரத்தைப் பரிசாகப் பெற்ற ஈழத்துத் தவில் வித்துவான்
(1) தவில் சின்னையாபிள்ளை (2) தவில் தக்ஷிணாமூர்த்தி
(3) ஆறுமுகம்பிள்ளை (4) இராஜரத்தினம் பிள்ளை
(5) என். சண்முகரத்தினம்

47. சங்கீர்ணஜாதி மட்டியதாளம் மிஸ்ரகதிபேதம் அடைவதினால் தோன்றும் மொத்த எண்ணிக்கை
(1) 100 (2) 108 (3) 120 (4) 140 (5) 180

48. ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரணகாந்தாரம், பிரதிமத்யமம், சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்களை எடுத்துக் கொள்ளும் இராகம்
(1) கௌரி மனோகரி (2) ஷண்முகப்ரியா (3) ஹேமவதி
(4) தர்மவதி (5) ஸிம்மேந்திர மத்யமம்

49. பிரம்மஸ்ரீ ம. த. ந. வீரமணிஐயர் பற்றிய செய்திகளில் **பொருத்தமற்றது**
(1) இசையிலும் நடனத்திலும் சிறந்து விளங்கினார்.
(2) சாகித்திய கலாகுருவாக நீலகண்ட சிவன் அவர்களைப் பெற்ற பேற்றினை உடையவர்.
(3) 72 மேளகர்த்தா இராகங்களிலும் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.
(4) கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையால் சாகித்திய சாகரம் என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றார்.
(5) 2003 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இறைபதம் அடைந்தார்.

50. 'ஆனந்த நடனப் பிரகாசம்' - என்னும் பஞ்சலிங்க ஸ்தலக் கிருதியை இயற்றிய வாக்கேயகாரர்
(1) ஸ்ரீ தியாகராஜர் (2) சியாமா சாஸ்திரிகள்
(3) முத்துஸ்வாமி தீக்ஷிதர் (4) ஸ்வாதித்திருநாள் மகாராஜா
(5) பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்

* * *

More Past Papers at
tamilguru.lk

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

කර්ණාටක සංගීතය II
கர்நாடக சங்கீதம் II
Carnatic Music II

55 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

**அறிவுறுத்தல்கள்:**

※ **பகுதி I** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், **பகுதி II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) கர்நாடக இசைக்கச்சேரிகளில் பக்கவாத்தியமாக வாசிக்கப்படும் தந்தி வாத்தியம் யாது?
(ii) இவ்வாத்தியத்தில் பிரபல்யம் பெற்ற **நான்கு** இந்தியக் கலைஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
(iii) இவ்வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
(iv) இவ்வாத்தியத்தின் சிறப்புகளில் **ஆறினைக்** குறிப்பிடுக.
(v) இவ்வாத்தியத்தை சுருதி சேர்க்கும் முறையினையும் வாசிக்கும் முறையினையும் விளக்குக.

**2.** (i) கன இராகத்தின் வரைவிலக்கணத்தைக் கூறி, அவ்விராகங்களின் பெயர்களைத் தருக.
(ii) கோபாலகிருஷ்ணபாரதியார் தமிழில் இயற்றிய பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் **ஐந்தினையும்** இராகங்களுடன் குறிப்பிடுக.
(iii) இராகத்தின் **பத்து** இலட்சணங்களையும் குறிப்பிட்டு, அவற்றுள் **நான்கினை** விளக்குக.

**3.** (i) இசைக்கருவிகளின் **நான்கு** முக்கிய பிரிவுகளையும் குறிப்பிட்டு, அவற்றுக்கு **இவ்விரண்டு** உதாரணங்கள் தருக.
(ii) இவ் இசைக்கருவிகளின் இதரபிரிவுகளில் **ஐந்தினை** உதாரணங்களுடன் விளக்குக.
(iii) இலங்கையில் உபயோகத்திலுள்ள கீபோட் (Keyboard) வாத்தியங்கள் **ஐந்தினைத்** தருக.
(iv) மகாநாடக வீணை என அழைக்கப்படும் வாத்தியம் யாது? இவ்வாத்தியத்திற்கும் வீணைக்கும் இடையிலான வேறுபாடுகள் **நான்கினைத்** தருக.

## பகுதி II

**4.** பின்வரும் இராகங்களில் இரண்டினைத் தெரிவு செய்து, அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்.)
(i) 28 வது மேளத்தின் ஜன்யமான வக்ர ஷாடவ சம்பூர்ண இராகம்
(ii) ஸ்ரீரஞ்சனி
(iii) 22 வது மேளத்தின் ஜன்யமான திரி அன்னியஸ்வர பாஷாங்க இராகம்
(iv) ஆனந்தபைரவி

**5.** (i) மாரிமுத்தாப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைக்கல்வியினையும் விரிவாகத் தருக.
(ii) அவர் இயற்றிய தமிழிசை நூல்கள் **நான்கினைத்** தருக.
(iii) அவரது உருப்படிகளின் சிறப்புகள் **நான்கினைக்** கூறுக.
(iv) அவர் இயற்றிய பிரபல்யமான உருப்படிகள் **நான்கினைத்** தருக.

**6.** கர்நாடக இசை, மேலைத்தேய இசை என்பவற்றிற்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை பின்வரும் விடயங்களின் அடிப்படையில் ஆராய்க.
(i) ஸப்த ஸ்வரங்களும் அவற்றின் பெயர்களும்
(ii) லிபி முறை
(iii) கச்சேரி முறை
(iv) தாளம்

**7.** கீழே தரப்பட்டுள்ள இசை உருப்படிகளில் **இரண்டினைத்** தெரிவுசெய்து, அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக.
(i) பதம் (ii) திருவாசகம் (iii) இலட்சண கீதம்

**8.** (i) மனோதர்ம சங்கீதப் பிரிவுகள் **ஐந்தினையும்** குறிப்பிடுக.
(ii) நீர் பார்த்து ரசித்த கர்நாடக இசைக்கச்சேரியில் மேற்கூறப்பட்ட அம்சங்களை மதிப்பிட்டு விமர்சிக்குக.

**அல்லது**

(i) ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் பயன்படுத்தப்படும் பத்து தாட்களையும் குறிப்பிட்டு, அவற்றிற்கு ஒப்பான கர்நாடக சங்கீத இராகங்களையும் குறிப்பிடுக.
(ii) ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் வழக்கிலிருக்கும் பிரபல்யமான தாளங்கள் பற்றி விரிவாக ஆராய்க.

* * *

More Past Papers at tamilguru.lk